

# சரியான பார்வை... சரியான வழி... 3 சரியான செயல்!

– தா.நெடுஞ்செழியன்



1950– 60 களில் கல்வி பற்றி நமக்கிருந்த சிந்தனை இப்போது இல்லை. பச்சையப்பா அறக்கட்டளை, அவினாசி லிங்கம் கல்வி அறக்கட்டளை, கல்வித் தந்தை கருமுத்து தியாகராஜ செட்டியார் நினைவு அறக்கட்டளை, மவுண்ட் சீயோன் கல்வி அறக்கட்டளை, முஸ்லிம் எஜுகேஷனல் ஆஃப் சதர்ன் இந்தியா போன்ற எண்ணற்ற கல்விக்கான அறக்கட்டளைகள் தோன்றியது அப்போதுதான். கல்வி வளர்ச்சிக்காக தமது சொந்த இடத்தைக் கொடுத்து, கட்டடம் கட்டிக் கொடுத்து, எல்லாரும் படிக்க வேண்டும், பிறர் நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காக பள்ளிகளை, கல்லூரிகளைத் தொடங்கி நடத்தியவர்கள் இருந்தார்கள். ஆனால் இன்று கல்வி பணம் சம்பாதிப்பதற்கான ஒரு வழியாகிவிட்டது.

நாம் இதை மாற்ற வேண்டும். ஒரு நல்ல மாற்றத்தை உருவாக்க வேண்டும். அந்த நல்ல மாற்றத்தை உருவாக்க நாம் தரும் விலை அளப்பரியதாக இருக்கலாம். அரசும், கொள்கை முடிவு எடுப்பவர்களும், கல்வியாளர்களும் எல்லாரும் ஒன்றாகச் சேர்ந்து அம்மாதிரியான நல்ல சூழ்நிலை உருவாகத் திட்டமிட வேண்டும். அவ்வாறு திட்டமிடவில்லை என்றால் வயதானவர்கள் கூட பாதிக்கப்படுவார்கள். இளையதலைமுறையினரின் சிந்தனை ஆக்கப்பூர்வமாக இல்லாமல், அழிவுப்பூர்வமாக மாறிவிடும்.

கல்வியில் நல்ல மாற்றத்தை உருவாக்க நாம் ஒரு பல்கலைக்கழகத்தையே உருவாக்க வேண்டும். அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பதற்கு THINK TANK என்ற ஒன்றை உருவாக்க வேண்டும். தமிழ்ச் சமுதாயம் முன்னேறுவதற்கான சூழலை உருவாக்க இது அவசியம்.

நமது நாட்டில் உள்ள வளங்களைப் பயன்படுத்தி வேலை வாய்ப்புகளை உருவாக்க வேண்டும் என்ற அடிப்படையில் நமது கல்விமுறையைத் திட்டமிட்டால் ஏராளமான வேலை வாய்ப்புகளை உருவாக்க முடியும்.

உதாரணமாக, சிங்கப்பூர், இலங்கை – இந்த இருநாடுகளைப் பாருங்கள். அங்கே சுற்றுலாத் துறை கொடி கட்டிப் பறக்கிறது. நமது நாட்டில் வரலாற்றுச் சிறப்புமிக்க பல இடங்கள் உள்ளன. நமது நாட்டுக்கு வரும் வெளிநாட்டுப் பயணிகளுக்கு நமது நாட்டில் உள்ள கோயில்களைப் பற்றி எடுத்துச் சொல்லும் சுற்றுலா வழிகாட்டிகளுக்கு நல்ல வேலை வாய்ப்பு இருக்கிறது. இவரைவிட சிறப்பாக இந்தக் கோயிலைப் பற்றி, இதன் வரலாற்றை அழகாக எடுத்துச் சொல்ல வேறுயாரும் இல்லை என்கிற மாதிரியான திறமையான சுற்றுலா வழிகாட்டிகளை உருவாக்கும்விதமாக பாடத்திட்டங்களை நாம் ஏற்படுத்த வேண்டும்.

சுற்றுலாத்துறையில் பணிபுரிய விரும்பும் மாணவர்கள், பல வெளிநாட்டு மொழிகளைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

ஜப்பானில் இருந்து ஒருவர் வருகிறார். அவரிடம் நமது வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களைப் பற்றி எடுத்துச் சொல்ல ஜப்பானியமொழி கற்றுக் கொள்ள வேண்டியது அவசியம். அப்படி உருவாகும் திறமையான சுற்றுலா வழிகாட்டிகளுக்கு நியாயமான ஊதியம் கிடைக்க அரசு வழி செய்ய வேண்டும். இன்னும் சொல்லப் போனால் அரசே சுற்றுலா வழிகாட்டிகளுக்கான கட்டணத்தை நிர்ணயிக்கலாம். சுற்றுலாப் பயணிகள் தரும் பணத்தில் அரசு தனது நிர்வாகச் செயல்களுக்காக சிறிது எடுத்துக் கொண்டு, மீதிப் பணத்தை சுற்றுலா வழிகாட்டிகளுக்குக் கொடுத்துவிடலாம். இதற்கான சிஸ்டத்தை அரசு உருவாக்க வேண்டும்.

ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு ஆந்திர மாநிலத்திற்கு எல்லா சிறப்பு மிக்க கல்வி நிறுவனங்களையும் புது மாநில உருவாக்கத்தின்போது கொண்டு வந்துவிட்டார். அங்கு இல்லாத கல்வி நிறுவனங்களே இல்லை. NID, IISER போன்ற மத்திய அரசின் கல்விநிறுவனங்களை எல்லாம் அவர் கொண்டு வந்தவை. மாணவர்களின் கல்வி அறிவை எவ்வளவுக்கு எவ்வளவு விரிவாக்குகிறோமோ, அவ்வளவுக்கு அவ்வளவு வாய்ப்புகள் உலக அளவில் இருக்கின்றன என்பதைப் புரிந்து கொண்டு செயல்படும் முதல் அமைச்சர் அவர். வேறு எந்த மாநிலமும் கேட்காத நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் டிசைன் (NID) என்பதை ஆந்திரப் பிரதேசத்துக்குக் கொண்டு வந்தார். அது 1961– இல் அகமதாபாத்தில் தொடங்கப்பட்டது. அது தொடங்கப்பட்டதிலிருந்து 2015– வரை மத்திய அரசின் தொழில், வணிகத்துறையின் கீழ் மட்டுமே இருந்தது. அதை முதன்முதலாக 2015– இல் அவர் ஆந்திரப் பிரதேசத்தில் தொடங்கினார். வேறு எந்த மாநிலத்திலும் இதைப் போல தொடங்கவில்லை. சந்திரபாபு நாயுடுவுக்கு இருப்பதைப் போல ஒவ்வொரு முதலமைச்சருக்கும் மாநிலத்தின்பால் அன்பும், மாநில மக்களின் வளர்ச்சிக்கான பார்வையும் இருக்க வேண்டும். அரசியல் தலைவர்களாகட்டும், கல்வித்துறை சார்ந்தவர்களாக இருக்கட்டும் இவர்களெல்லாம் முறையாகச் சிந்தித்து செயல்படவில்லை என்றால் வளர்ச்சி என்பது கண்காணா மலேயே போய்விடும்.

நம்நாட்டில் நிறைய வளம் இருக்கிறது. அப்படியே இல்லாத பகுதிகளிலும் கூட நம்மால் சமாளிக்க முடியும். விவசாயத்தின் முக்கியத்துவம்பற்றி நாம் அதிகமாக யோசிப்பதில்லை. சில வெளிநாடுகளில் விவசாயம் செய்ய இடமே இல்லை. நம்நாட்டில் விவசாயத்தை மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு நாம் செயல்படவில்லை.

வெளிநாடுகளில் உயிரியல் பூங்காக்களை நன்றாக நடத்துகிறார்கள். நம்நாட்டில் உயிரியல் பூங்காக்களை முறையாகப் பராமரிப்பதில்லை. புதிய உயிரியல் பூங்காக்களை உருவாக்குவதில்லை. விலங்குகள் வாழ்வதற்குப் பொருத்தமான சுற்றுச் சூழலையும் நாம் பாதுகாப்பதில்லை.

நம்நாட்டில் எண்ணற்ற ஆராய்ச்சிகளுக்கான வாய்ப்புகள் உள்ளன. நாம் நம்நாட்டின் சொந்த வளங்களை முறையாகப் பயன்படுத்துவதில்லை. வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்கள் என்பவை வெறும் வரலாறு சார்ந்தது மட்டும் இல்லை. கல்லணை இவ்வளவு உறுதியாக எப்படிக் கட்டப்பட்டது? அதன் தொழில்நுட்பங்கள் எவை? அதன் நீர்ப்பாசனம் எந்தெந்த இடங்களில் எப்படி இருந்தது? அதன் நீர்ப்பாசன முறை எந்த அளவுக்குச் சிறப்பானது? என்பது பற்றியெல்லாம் நாம் ஆராய்ச்சி செய்யவில்லை. நம்நாட்டில் ஏகப்பட்ட சிவில் இன்ஜினியரிங் கல்லூரிகள் உள்ளன. யாருமே கல்லணையை ஆராய்ந்து, உண்மைகளைக் கண்டறிந்து அதை ஆவணப்படுத்தவில்லை.

ஆனால் வெளிநாட்டைச் சேர்ந்த ஸ்காட் என்பவர் கல்லணையை ஆழமாக ஆராய்ந்தார். இதற்காக மேற்கு கோதாவிரி பகுதியில் அமலாபுரத்தில் அவருக்கு ஒரு மியூசியமே வைக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் இல்லாததே கிடையாது. தொன்றுதொட்டு தமிழர்கள் புரிந்த சாதனைகள் அளப்பரியவை. அவற்றைப் பட்டியலிடவே முடியாது. கப்பல் கட்டுதலில் நாம் மிகச் சிறப்பாக இருந்திருக்கிறோம். சோழப் பேரரசு கி.பி.1000 காலத்தில் உலகிலேயே மிகச் சிறந்த பேரரசாக இருந்திருக்கிறது.

உலோகவியலிலும் நாம் சிறப்பாக இருந்திருக்கிறோம். செப்புக் காசுகள், பொற்காசுகளை நாம் அந்தக் காலத்திலேயே செய்திருக்கிறோம். உலோகவியலில் WOOD STEEL என்ற தொழில்நுட்பம் நம்மிடம் இருந்திருக்கிறது. போரின்போது, எட்டுமணி நேரம் தொடர்ச்சியாக வாள்வீச்சு செய்த வீரர்களுக்கு – அவர் எவ்வளவுதான் சண்டையிட்டாலும் – அந்த வாளில் இருந்து கைக்கு எந்த அதிர்ச்சியும், வராத வகையில் - பாதிப்பும் இல்லாதவகையில் வாளை உருவாக்கியிருக்கிறார்கள். அம்மாதிரியான திறமைகள் நம்மிடம் நிறைய இருந்திருக்கின்றன. பொற்கொல்லர்கள் நிறையப் பேர் இருந்திருக்கிறார்கள். விதவிதமான நிறைய ஆபரணங்களை அவர்கள் செய்திருக்கிறார்கள். தங்கத்தை அளப்பதற்கான வழிமுறை நம்மிடம்தான் முதன்முதலில் இருந்திருக்கிறது. ஒன்று, பத்து, முக்கோடி என்பதற்கான வழிமுறை நம்மிடம் இருந்திருக்கிறது? பிரம்மகற்பம் என்றால் என்ன? பத்துப் பத்தாக கூட்டினால் என்ன வரும் என்று கண்டுபிடித்திருக்கிறோம். வீசம், கால் வீசம் என ஒன்றைப் பலவிதங்களில் பிரித்து காட்டியிருக்கிறோம். இவையெல்லாம் வேறு எந்த நாட்டிலும் இல்லவே இல்லை.

குழந்தைப் பருவத்தில் இருந்தே மாணவர்களுக்கு நம்நாட்டின் பழமையான சிறப்புமிக்க உயர்ந்த விஷயங்களைக் கற்றுக் கொடுக்க வேண்டும். அவற்றைப் பற்றி மாணவர்கள் பெருமைப்பட வேண்டும். நமது கல்வியில் அதற்கான அம்சங்களை இடம் பெறச் செய்ய வேண்டும்.

இவ்வாறு நம்மிடம் இருந்த பழமையான நல்ல அம்சங்களைக் கணக்கில் கொள்ளாமல், நாம் இப்போது அரசியலையும், பொழுதுபோக்கையும் முக்கியத்துவம் வாய்ந்ததெனக் கருதிக் கொண்டிருக்கிறோம். கல்வி பின்னுக்குத் தள்ளப்பட்டுவிட்டது.

கல்விக்கு முக்கியத்துவம் தரவில்லை என்றால் நம்நாட்டில் வளர்ச்சி இருக்காது. அழிவுப்பூர்வமான மாற்றங்களையே நாம் எதிர் கொள்ள வேண்டியிருக்கும். நாம் இப்போது தமிழ்நாட்டின் சாதனைகளைக் கொண்டாடுவதற்குப் பதிலாக வேதனைகளைத்தான் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

ஒருதனிமனிதன்வளர்ச்சிபெற்றால்நாடுவளர்ச்சி பெறும். நம்நாட்டில் பல்வேறு துறைகளில் சாதனை செய்தவர்கள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள்? அப்படிப்பட்ட சாதனையாளர்களை முன்னிலைப் படுத்தி, இவர்கள் எல்லாம் வாழ்க்கையில் இவ்வளவு கஷ்டப்பட்டு சாதித்திருக்கிறார்கள் என்பதைக் கூறினால், பிறருக்கு அது முன்னேறுவதற்கான உத்வேகத்தைக் கொடுக்கும். அடுத்த கட்ட வளர்ச்சிக்கான அடிப்படையை அது ஏற்படுத்திக் கொடுக்கும்.

(தொடரும்)

கட்டுரையாசிரியர் சமூக கல்வி ஆர்வலர்
www.indiacollegefinder.org